மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்களுக்கு ஒன்றை அறிவித்தார்கள் என்று நினைக்கிறேன். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இதைப் பற்றி ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரிடத்தில நான் கேட்கிறேன், தயவுசெய்து விரைந்து செயல்படுவாரா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவா கள் சொன்னபடி எந்த பாரபட்சமும் இந்த அரசுக்கு இல்லை. பணிகளை முடுக்கிவிட இந்த அரசு தனி கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார் கள் அத்தனை பேரும் 2 மாதம், அல்லது 3 மாதங்கள் வரை இருந்துதான் வேலை பார்க்கின்றார்கள். பிறகு லீவ் போட்டு விட்டு, வேறு துறைக்குச் சென்று விடுகிறார்கள். எனவே ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் இத்தனை ஆண்டுக்காலம் அந்தத் துறையிலேயே பணியாற்ற வேண்டு மென்று கட்டுப்பாடோடு தாசில்தார்கள் ஏற்றுகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு ஒவ்வொரு தாசில்தாரி டத்திலேயும் ஜீப்பே கிடையாது. அவர்கள் சென்று வருவதற்கு வாகன வசதி கிடையாது. முன்னேற்றமான பணிகளோ அல்லது திட்டங்கள் தயாரிக்கின்ற பணிகளோ மிகத் தாமதப்படுத்தப் படுகின்ற காரணத்தினால், இரண்டு தாசில்தார்களுக்கு ஒரு ஜீப்பையாவது வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டாட்சியருக் கும் பொதுவாக வாகன வசதி இருக்கிறது. அந்த வாகன வசதியை வைத்துக்கொண்டுதான் தனி வட்டாட்சியர் அவர்கள் செயல் படுகிறார்கள். தற்காலிகமாக பணி முடக்கப்பட்டிருக் கின்ற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால் உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பாரேயானால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன்.

நினைவுச் சின்னம்.

* 5177—திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா:

1990 மே,, 7]

விடுதலை வீரர் திருவண்ணாமலை தியாகி திரு. அண்ணாமலைப்பிள்ளை குடியிருந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னம் ஏற்படுதும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே :

இல்லை 9-45 மணி

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அந்த வீரருடைய இல்லத்தை நினைவுச் சின்னமாக மாற்றினால் எதிர்கால சந்ததியினர் சுதந்திரத்தினுடைய முக்கியத்துவத்தையும், பழைய கால வரலாற்றையும் அறியும் பொருட்டு இதுபோன்ற தியாகிகளுடைய இல்லங்களை நினைவுச் சின்னமாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நமது முன்னோர்கள் நமது இனத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு, பல்வேறு தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்புவது, அவர்கள் வாழ்ந்த இல்லங்களை நினைவுச் சின்னமாக அரசு அறிவிப்பது, அரசு அதை எடுத்து அருங்காட்சியகமாக அமைப்பது போன்றவை எல்லாம் பல்வேறு தலைவர்களுக்கு இதுவரை செய்தித் துறையின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவருக்கும் அரசின் சார்பாக நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமானால் அரசு அதைப் பற்றி ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 5289—திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டத்தில் புதிய பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தடையேதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை,